# தினகரன்



22 தினகரன்
பொங்கல் மலர்-2026
15-1-2026
கவிதா'ஸ்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி (Co-Ed)
2026-2027
அட்மிஷன் நடைபெறுகிறது
UG COURSES
PG COURSES
PER TERM Rs.7000
B.A. Tamil
B.A. English
B.Com.
B.B.A
B.Sc. Maths
B.Sc. Physics
B.Sc. Chemistry
B.Sc. Botany
B.Sc. Zoology
PER TERM Rs.8000
B.Com. C.A
B.Sc. C.S
B.Sc. C.S(AI & DS)
B.Sc. Microbiology
B.SC. Biotechnology
PER TERM Rs.8000
M.A. Tamil
M.A. English
M.Com.
M.Sc. C.S
இலவச
பேருந்து வசதி
குறைந்த கட்டணத்தில் 100% தரமான கல்வி
வையப்பமலை, திருச்செங்கோடு (Tk), நாமக்கல்.
98427 56661 | 98427 58088
www.kavithascollege.com

தினகரன்



திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கல்லூரியில் நடந்த குடியரசு தின விழாவில் முதல்வர் விஜயகுமார் பேசினார்.

# கவிதாஸ் கல்லூரியில் 77வது குடியரசு தினவிழா

**திருச்செங்கோடு, ஜன. 28-** நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 77வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. தமிழ்த் துறை உதவி பேராசிரியர் பெரியசாமி வரவேற்றார். கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமையேற்று தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நம் தாய் திருநாட்டிற்கு பெருமை சேர்க்கும் விதமாக இன்றைய ஆசிரியர்கள் வருங்கால இளைய சமுதாயத்திற்கு சிறந்த ஒழுக்கம், சிறந்த கல்வி, நாட்டுப்பற்றினை வளர்ப்பது தலையாய கடமை, என்றார்.

கல்லூரி முதல்வர் விஜயகுமார், குடியரசு தின சிறப்புகளை கூறி வாழ்த்துரை வழங்கினார். ஆங்கிலத்துறை துறை தலைவர் ராஜேஷ் உறுதிமொழி ஏற்க வைத்தார். வேதியியல் துறை தலைவர் ராஜ் பிரகாஷ் சிறப்புரையாற்றினார். முடிவில் வணிக நிர்வாகவியல் துறை தலைவி சுதா நன்றி கூறினார். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் திருமலைப் பாண்டியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

தினகரன்

அணிவித்தார். அதனை தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலை...

...ளர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் கலந்து...

Dinakaran

# கவிதாஸ் கல்லூரியில் விளையாட்டு தினவிழா



திருச்செங்கோடு, பிப்.8: வையப்பமலை கவிதா'ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 11வது விளையாட்டு விழா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவனர் மற்றும் தாளாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். கல்லூரி தலைவர் பழனியப்பன், துணை தலைவர் சரஸ்வதி அம்மாள், செயலாளர் கவிதா செந்தில்குமார், முதல்வர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக சேலம் ஜெயம் கலைக் கோட்டத்தின் நிறுவனர் நடராஜ் கலந்து கொண்டார். விலங்கியல் துறை தலைவர் ப்ரேம்தாஸ் வரவேற்றார். உதவி பேராசிரியர் இளங்கோவன் விளையாட்டு அறிக்கையை வாசித்தார். தமிழ்த்துறை தலைவர் சதிஷ்குமார் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற்ற மாணவர்களின் அணிவகுப்பு, வாலிபால், கபடி, கோ-கோ, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 100 மீட்டர், 1500 மீட்டர் ஓட்ட பந்தயம், குண்டு எறிதல், தட்டு எறிதல் போன்ற போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கணிதவியல் துறை தலைவர் கேசவன் நன்றி கூறினார். விழா நிகழ்வுகளை தமிழ்துறை உதவி பேராசிரியர் திருமலை பாண்டியன் தொகுத்து வழங்கினார். ...

# தினகரன்


துவக்க விழாவில், எலச்சிபாளையம் ஒன்றிய செயலாளர்கள்

Dinakaran

## கவிதாஸ் கலை அறிவியல் கல்லூரியில்

# தொழில் முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்செங்கோடு, பிப்.17: வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் நாமக்கல் மாவட்ட தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் இணைந்து, தொழில் முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை கல்லூரி வளாகத்தில் நடத்தின. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தொழில் முனைவோர்

மேம்பாட்டு மற்றும் புதுமை நிறுவன நாமக்கல் மாவட்ட திட்ட மேலாளர் வாசுதேவன் கலந்து கொண்டு பேசுகையில், 'மாணவர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக மாற வேண்டும். அரசு வழங்கும் பல்வேறு நிதி உதவி மற்றும் தொழில் ஆதரவு திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்,' என்றார். ஆங்கிலத்துறை உதவி பேராசிரியரும், தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய

. ஒருங்கிணைப்பாளருமான சர்தார் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். ஆங்கிலத்துறை மாணவி கலைவாணி வரவேற்றார். மாணவி கவிதர்ஷினி நன்றி கூறினார்.

# தினகரன்

தூவி மரியாதை செலுத் காரவேலு, ஜிம்.ரமேஷ், ளர் ஜெய்கணேஷ் நன்றி கூறினார்.

திருச்செங்கோடு வையப்பமலை

## கவிதாஸ் கல்லூரியில் 11வது ஆண்டு விழா



திருச்செங்கோடு, பிப்.25- நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 11வது ஆண்டு விழா நடந்தது. கல்லூரி நிறுவனர் மற்றும் தாளாள்ர் செந்தில்குமார் தலைமை வகித்தார். கல்லூரி தலைவர் பழனியப்பன், துணைத் தலைவர் சரஸ்வதி, செயலாளர் கவிதா செந்தில்குமார், முதல்வர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ஈரோடு தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தின் இயக்குநரும், பட்டிமன்ற பேச்சாளருமான ரவிக்குமார் கலந்து கொண்டார். கல்லூரி தமிழ் துறை தலைவர் சதிஷ்குமார் வரவேற்றார்.

தாளாளர் செந்தில்குமார் தலைமையுரையில், மாணவர்கள் படிக்கும் காலத்திலேயே நல்ல வேலைவாய்ப்பை பெற்று கல்லூரிக்கும் பெற்றோருக்கும் நற்பெயர் சேர்க்க வேண்டும், என்றார். முதல்வர் விஜயகுமார் ஆண்டறிக்கை மற்றும் பல்வேறு சாதனைகளை விளக்கி பேசினார். சிறப்பு விருந்தினரை தமிழ் துறை உதவி பேராசிரியை ஜெயந்தி அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் ரவிக்குமார் பேசுகையில், பேராசியர்களின் கண்டிப்பை நல்ல வழியில் எடுத்து கொண்டு மாணவர்கள் திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும், என்றார்.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. 2026ம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களில் கல்லூரி மூலம் வேலை வாய்ப்பு பெற்ற 200க்கும் மேற்பட்ட பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. முடிவில் கணிதவியல் பேராசிரியர் கேசவன் நன்றி கூறினார். விழா நிகழ்வுகளை தமிழ் துறை உதவி பேராசிரியர் திருமலைபாண்டியன் தொகுத்து வழங்கினார்.

தினகரன்




திருச்செங்கோடு, வையப்பமலை கவிதாஸ் கலை அறிவியல் கல்லூரியில் அரசின் விலையில்லா மடிக்கணினிகளை மாணவ, மாணவிகளுக்கு ஈஸ்வரன் எம்எல்ஏ வழங்கினார். அருகில் தாளாளர் செந்தில்குமார் உள்ளார்.

## திருச்செங்கோடு கவிதாஸ் கல்லூரியில்

# 472 மாணவர்களுக்கு லேப்டாப்

### ஈஸ்வரன் எம்எல்ஏ வழங்கினார்

திருச்செங்கோடு, மார்ச் 2-

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழக அரசின் உலகம் உங்கள் கையில் என்னும் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகள் வழங்கும் விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். தலைவர் பழனியப்பன், துணை தலைவர் சரஸ்வதி, செயலாளர் கவிதா, முதல்வர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் விஜயகுமார் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈஸ்வரன் எம்எல்ஏ பங்கேற்று பேசுகையில், மாணவர்கள் கல்லூரி படிப்பை முடித்தவுடனே தொழில் முனைவோராகவோ, தமிழக அரசின் பணியில் பணிபுரிபவராகவோ முயல வேண்டும். மாணவர்கள் கற்றல் அறிவை வளர்த்து கொள்ளவும் செயற்கை தொழில்நுட்பம் போன்ற வசதிகளை எளிமையாக கற்று கொள்ளவும், தமிழக அரசின் இந்த விலையில்லா மடிக்கணினிகள் பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும், என்றார். தொடர்ந்து 472 மாணவர்களுக்கு அரசின் மடிக்கணினிகள் வழங்கப்பட்டது. நிகழச்சியை தமிழ்த்துறை தலைவர் சதிஷ்குமார் தொகுத்து வழங்கினார்.

தினகரன்

சேலம் மாவட்ட 108 ஆம்
புலன்ஸ் நிர்வாக ஒருங்கி

டும். இவ்வாறு அவர்கள்
தெரிவித்தனர்.

Dinakaran

### கவிதாஸ் கல்லூரியின்

# நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் ரத்ததான முகாம்




**திருச்செங்கோடு, மார்ச் 24:** வையப்பமலை கவிதா’ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் ரெட் ரிப்பன் கிளப் சார்பில், ரத்த தான முகாம் நடைபெற்றது. இந்த முகாம் திருச்செங்கோடு அரசு பொது மருத்துவமனை மற்றும் மாணிக்கம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்பட்டது. கல்லூரியின் முதல்வர் விஜயகுமார் வரவேற்றார். கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாணவ, மாணவிகள் கல்லூரியில் படிக்கும் இளம் வயதிலேயே ரத்ததான முகாமில் பங்கேற்பது வரவேற்கத்தக்கது. ரத்தம் கொடுத்தல் மிகச்சிறந்த தானமாகும். இந்த பழக்கத்தை மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். முகாமில் கல்லூரி மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் ரத்த தானம் வழங்கினர். அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. முகாமில், திருச்செங்கோடு அரசு மருத்துவமனை மருத்துவர் செந்தில்குமார், வட்டார மருத்துவ அலுவலர் கருணா கரன், மருத்துவ மேற்பார்வையாளர் முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் செய்திருந்தார். ...

தினகரன்

ஸல் கல்வி நிறுவனங்களின் நிறுவன தலைவர் நடேசன், துணைத்தலைவர் மதன்

பேராசிரியர் ... நன்றி கூறினார். செய்தி ...ருந்தார்.

dkn

### வையப்பமலை கவிதாஸ் கல்லூரியில்

# முதல் வாக்காளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்செங்கோடு, மார்ச் 27-
நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தேர்தல் விழிப்புணர்வு மன்றம் மற்றும் யூத் ரெட் கிராஸ் இணைந்து முதல் வாக்காளர் விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தியது. கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் விஜயகுமார் வரவேற்றார். மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான துர்காமூர்த்தி பங்கேற்று, மாணவர்கள் நூறு சதவீதம் வாக்களிக்க வேண்டும், முதல் வாக்காளர்கள் எவ்வாறு வாக்கு செலுத்த வேண்டும் என அறிவுரைகளை வழங்கினார். இறுதியாக என் வாக்கு என் உரிமை என்னும் உறுதிமொழியை கலெக்டர் வாசிக்க அனைத்து மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஏற்றுக்கொண்டனர். இதில் உதவித்தேர்தல் அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், உதவி திட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை யூத் ரெட் கிராஸ் திட்ட அலுவலர் மகேந்திரன் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ராஜேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.




திருச்செங்கோடு கவிதாஸ் கல்லூரியில் நடந்த 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலெக்டர் துர்காமூர்த்தி பேசினார்.

தினகரன்

போடப்பட்டது. நாமக்கல்
கால்நடை மருத்துவக் கல்
லூரி மற்றும் ஆராய்ச்சி

ரியர் வசந்தகுமார், கால்
நடை இனப்பெருக்கம்
மற்றும் ஈனியல் துறை
... பேராசிரியர்

Dinakaran

## கவிதாஸ் கலை அறிவியல் கல்லூரியில்

# தமிழர் பண்பாட்டு கலைத்திருவிழா




திருச்செங்கோடு, ஏப்.27: திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை அறிவியல் கல்லூரியில், தமிழ்த்துறை செந்தமிழ் மன்றம் சார்பில், தமிழர் பண்பாட்டு கலைத் திருவிழா நடைபெற்றது. விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் சதிஸ்குமார் வரவேற்றார். கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கி பேசினார். கல்லூரி செயலாளர் கவிதா முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் விஜயகுமார் வாழ்த்தி பேசினார். முளைப்பாரி ஊர்வலம், குற்றால குறவஞ்சி நாடகம், சிலப்பதிகாரம் நாடகம், திருவிளையாடல் புராணம், சிவன் பார்வதி நடனம், கருப்பசாமி வேடம், காளியம்மன் வேடம், அரச்சநல்லூர் சக்தி கலை குழுவின் பாரம்பரிய வள்ளி கும்மி, ஒயிலாட்டம், மயிலாட்டம், பறை இசை, நாதஸ்வரம் மற்றும் நையாண்டி இசை, பொய்க்கால் குதிரை, போன்றவை நடைபெற்றது.

விழாவை மாணவ, மாணவிகளும் ஆர்வமாக கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறைத்தலைவர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர். ...